*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2023** **02 மார்ச் 2023**

## பத்திரிகை செய்தி

பாரத் தர்ஷன் திட்டத்தின்கீழ் புதுச்சேரி வந்த திரு. அந்தர் சிங் நெஹ்ரா தலைமையில் இந்திய ஆட்சிப் பணி பயிற்சி அதிகாரிகள் இன்று(02.03.2023) மரியாதை நிமித்தமாக மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் அவர்களை துணைநிலை ஆளுநர் மாளிகையில் சந்தித்து பேசினர்.

அவர்களை வரவேற்ற துணைநிலை ஆளுநர், தெலுங்கானா மாநில ஆளுநராகவும் புதுச்சேரி மாநிலத்தின் துணைநிலை ஆளுநராகவும் தமது அனுபவங்களை அவர்களோடு பகிர்ந்து கொண்டார்.

மேலும், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளின் செயல் திறம் அரசு நிர்வாகத்தை சீர்படுத்த உதவ வேண்டும். மக்கள் நலம் சார்ந்த, நடைமுறைக்கு ஏற்ற நிர்வாகத்தை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.